Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 37 • ஞாயிற்றுக்கிழமை Sunday • 07.12.2025 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

# ஒரு சமூகம் முன்னேற வேண்டும் என்றால் கல்விதான் அடிப்படை

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை:

ஒரு சமூகம் முன்னேற வேண்டும் என்றால், அதற்கு கல்விதான் அடிப்படை என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார். அதனை தொடர்ந்து அவர் பேசியதாவது:சென்னை உணவு

எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். எல்லோரும் சமமாக வாழுகின்ற சமத்துவ சமுதாயம் அமைய வேண்டும் என்பது தான் நம்முடைய லட்சியம். ஆட்சிப் பொறுப்பு என்பது, நம்முடைய லட்சியங்களை திட்டங்கள் மூலமாக வென்றெடுப்பதற்கான வழி. அதனால்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போதெல்லாம், சமூகநலத் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி, விளிம்பு நிலையில் இருக்கின்ற மக்களையும் முன்னேற்றிக்கொண்டு வருகிறோம்.வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி கொடுப்பதுடன், அவர்கள் மேலெழுந்துவருவதற்குதுணை நிற்கிறோம்.

நம்முடையதிட்டங்கள் மற்றும் முன்னெடுப்பு களைப் பற்றி முக்கிய மானவற்றை மட்டும் நான் சொல்ல வேண்டும் என்றால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு செயல்திட்ட சட்டம், 2024ஐ நிறைவேற்றி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சட்டப்பூர்வ உறுதியை உருவாக்கியிருக்கிறோம். இந்தத் திட்டத்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வளர்ச்சி திட்டங்களுக்காக, நிதிகள் விகிதாச்சாரப்படி கட்டாயம் ஒதுக்கப்பட்டு, சரியாக பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

2021 முதல் 2025 வரைக்கும் ஆதிதிராவிடர் துணை திட்டத்திற்கு 87 ஆயிரத்து 664 கோடி ரூபாயும், பழங்குடியினர் துணை திட்டத்திற்கு 8 ஆயிரத்து 78 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கியிருக்கிறோம்.ஒருசமூகம் முன்னேற வேண்டும் என்றால், அதற்கு கல்விதான் அடிப்படை. அதனால்தான், பல்வேறு திட்டங்கள் மூலமாக, கல்வியில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியிருக்கிறோம். தேசிய நுழைவுத் தேர்வுகளுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறோம். இதனால், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருப்பது மட்டுமல்ல, ஐ.ஐ.டி – என்.ஐ.டி போன்ற கல்வி நிறுவனங்களில், கடந்த 2024–25 கல்வியாண்டில், 16 மாணவர்கள் மட்டுமேசேர்ந்தநிலைமாறி, இந்த 2025–26 கல்வியாண்டில், 135 மாணவர்கள் முன்னணி கல்வி நிறுவனங்களில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் எந்தளவுக்கு மாணவர்கள் மீது அக்கறைஎடுத்துமேம்படுத்துகிறோம் என்பதற்கு, எம்.சி.ராஜா சமூகநீதி விடுதியே அதற்கு சாட்சி, 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றி, மாணவர்களுக்கான நவீன வசதிகளுடன் அதை உருவாக்கியிருக்கிறோம்.

இதேபோல், சென்னை – கோவை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில், 'ஜிம்' உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய 6 'மாதிரி விடுதி'-களை 80 கோடி ரூபாய்செலவில்அமைத்துக் கொண்டிருக்கிறோம்.விடுதிகளில்தங்கி படிக்கின்ற மாணவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க, 36 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 77 கற்றல் மற்றும் கற்பித்தல் அறைகளை கட்டியிருக்கிறோம். விடுதிகளை முறையாக பராமரிக்கவும், மாணவர்களின் பாதுகாப்புக்காகவும், சிசிடிவி–பயோ–மெட்ரிக் வருகைப் பதிவு கருவிகளோடு இருக்கின்ற விடுதி மேலாண்மைதகவல் அமைப்பை 27 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் ஆயிரத்து 383 விடுதிகளில் நிறுவியிருக்கிறோம்.

அடுத்து, நம்முடைய அரசு சிறப்பாக செயல்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய திட்டங்களில் முத்தாய்ப்பான திட்டமாக நான் நினைப்பது, 'அண்ணல் அம்பேத்கர் அயல்நாட்டு கல்வி உதவித்தொகை திட்டம்' உலகளவில் இருக்கின்ற டாப் யூனிவர்சிட்டியில் நம்முடைய பிள்ளைகள் படிக்க, அவர்களின் குடும்ப வருமான வரம்பை 12 லட்சம் ரூபாயாகவும், உதவித்தொகையை 36 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். இந்த திட்டத்தின் வெற்றியை நீங்கள் எல்லோரிடமும் கொண்டு செல்லவேண்டும். 2003ல் இருந்து, 2021 வரைக்கும், இந்த திட்டத்தில் பயனடைந்த மாணவர்கள் எத்தனை பேர் தெரியுமா? ஆறு பேர், ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளால், கடந்த ஐந்து ஆண்டுகளில் 385 மாணவர்கள் – ஆக்ஸ்ஃபோர்ட் – எடின்பரோ உள்ளிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# புதுவை பொதுக்கூட்டத்தில் 9ந் தேதி த.வெ. விஜய் பேசுகிறார்

## சிறப்பான பாதுகாப்பு வழங்க மாநில அரசு உறுதி



புதுச்சேரி,

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் முதல்முறையாக நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் களம் இறங்க இருக்கிறது. முதல் தேர்தலிலேயே வெற்றிக் கனியை பறித்துவிடும் ஆர்வத்தில் விஜய் உள்ளார். அதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். துரதிர்ஷ்டவசமாக கடந்த செப்டம்பர் மாதம் 27–ந் தேதி கரூரில் நடந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் விஜய் பேசிக் கொண்டிருந்தபோது கடும் நெரிசல் ஏற்பட்டதில் 41 பேர் பலியானார்கள். அதன்பிறகு, அவரது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கப்படவில்லை. உள் அரங்க நிகழ்ச்சிகளுக்கே அனுமதி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுவிட்டது. அதன்பிறகு, கடந்த மாதம் காஞ்சீபுரத்தில் உள் அரங்ககூட்டமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் 2 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

அதன் பிறகு, அண்டை மாநிலமான புதுச்சேரியில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்த தமிழக வெற்றிக் கழகம் அனுமதி கோரியது. ஆனால், தமிழக சாலைகளைவிட புதுச்சேரி சாலைகள் சிறியவை என்று கூறி, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு புதுவை அரசு அனுமதி மறுத்துவிட்டது. இந்த நிலையில், பொதுக்கூட்டத்திற்காவது அனுமதி தாருங்கள் என்று மீண்டும் கோரப்பட்டது. புதுச்சேரி முதல்–மந்திரி ரங்கசாமி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுத.வெ.க. பொதுக்கூட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளார்.

புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் வரும் 9–ந் தேதி த.வெ.க. பொதுக்கூட்டம் நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் 10 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பொதுக்கூட்டத்திற்கு மேடை அமைக்கப்படவில்லை. மாறாக, பிரசாரவாகனத்தில் நின்றபடியே விஜய் பேச இருக்கிறார். கூட்டத்தில் பங்கேற்கும் 10 ஆயிரம் பேருக்கும் கியூ.ஆர். கோடுடன் கூடிய அனுமதி அட்டை வழங்கப்பட இருக்கிறது.மேலும்,10 கட்டங்களாக பிரித்து ஒவ்வொரு கட்டத்திற்குள் ஆயிரம் பேர் அமரும் வகையில் தடுப்பு கட்டைகளுடன் இருக்கைகள் அமைக்கப்படுகிறது. தீயணைப்பு மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் நிறுத்த தனிப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9–ந் தேதி காலை 10.30 மணி முதல் 12 மணி பொதுக்கூட்டம் நடத்தஅனுமதிவழங்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் விஜய் 45 நிமிடங்கள் பேச இருப்பதாக கூறப்படுகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாக செய்து தருவதாக புதுச்சேரி அரசு உறுதியளித்துள்ளது.

தவெக தலைவர் விஜய்முன்னிலையில், நேற்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த திராவிட இயக்க பேச்சாளர் நாஞ்சில் சம்பத், தமிழக வெற்றிக்கழகத்தின் பரப்புரை செயலாளராக (Campaign Secretary) நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

மூத்த அரசியல்வாதியும், பேச்சாளருமான நாஞ்சில் சம்பத் தவெகதலைவர் விஜய் முன்னிலையில் நேற்று (டிச.05) அக்கட்சியில் இணைந்தார். இதனையொட்டி, இன்று தவெகவின் பரப்புரை செயலாளராக நாஞ்சில் சம்பத் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில்,தவெகதலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தின் மூத்த அரசியல்வாதிகளுள் ஒருவர், சிறந்த பேச்சாளர், அனைவரிடத்திலும் இனிமையாகப் பழகக் கூடியவர், அண்ணன் நாஞ்சில் சம்பத்.

தம்மைத் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டுள்ளார். மக்களுக்கான அரசியலில் நம்மோடு பயணிக்க இருக்கும்அவரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அண்ணன் நாஞ்சில் சம்பத், கழகத்தின் பரப்புரைச்செயலாளர் (Campaign Secretary) பொறுப்பில் நியமிக்கப்படுகிறார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவர், பொதுச் செயலாளர் என். ஆனந்த் உடன் இணைந்து தன்னுடைய பணிகளை மேற்கொள்வார்.

கழக நிர்வாகிகளும் தோழர்களும் இவருக்கு முழு ஒத்துழைப்பு நல்கி, மக்கள் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# தமிழகத்தில் டிச.12 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு; சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்




சென்னை:தமிழகத்தில் நாளை முதல் டிச.12–ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு கேரள கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலகீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, நாளை (டிச.7) தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்காலிலும்இடி,மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். டிச.8 முதல் 12–ம்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது அல்லது மிதமான மழை பெய்யக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் டிச.8 முதல் 12–ம்தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, அதிகபட்சமாக மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம், திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் தலா 5 செமீ, கடலூர் மாவட்டம் அண்ணாமலை நகர், திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, காக்காச்சி, மாஞ்சோலை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம் நாகுடியில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# எஸ்.ஆர்.எம். வேளாண்மை அறிவியல்
## உலக மண் தின விழிப்புணர்வு

செங்கல்பட்டு மாவட்டம் பாபுராயன்பேட்டை எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் உலக மண் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



எஸ்.ஆர்.எம். வேளாண்மை அறிவியல் கல்லூரியின் கிராமப்புற வேளாண் பணித்திட்ட (RAWE) மாணவர்களான Maslows குழு உறுப்பினர்கள் நவீன் ராபின்சன், கோபிநாத், அருண்குமார், பிரதீஷ், யோக்கேஷ் பாண்டி, சந்த்ரு, ஆதிஷ் ரமணா, நவீன் குமார், பழனிவேல் ஆகியோர், வாயலூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தின் சுமார் 2-4 சென்ட் பரப்பளவை சுத்தம் செய்தனர். இந்த முயற்சிக்கு பள்ளி HM திருமதி எழில் பாவை வழங்கிய அனுமதி, ஆதரவு மற்றும் ஊக்கம் முக்கிய பங்காற்றியது.

மாணவர்கள் தன்னார்வத்துடன் வளாகத்தை அழகுபடுத்தி, குப்பைகளை அகற்றி, சுற்றுச்சூழல் சுகாதாரம் மேம்படச் செய்த விதம் அனைவராலும் பாராட்டப்பட்டது. மேலும், மண் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நடைமுறையில் எடுத்துக்காட்டும் வகையில்

RAWE மாணவர்கள் பள்ளி வளாகத்தில் Kitchen Garden ஒன்றை அமைத்து கீரை, தக்காளி, மிளகாய், முருங்கை,வாழைபோன்ற பயனுள்ள தாவரங்களை நட்டனர். கூடுதலாக, பள்ளி மாணவர்கள் கைதுவைக்கும் போது உருவாகும் கழிவுநீரை தோட்டத்துக்கு பயனுள்ளதாக மாற்றும் நோக்கில், ஒரு நீரோட்டச் சாலை மாணவர்களால் உருவாக்கப்பட்டது. "Healthy Soils for Healthy Cities" என்ற உலகமண்தின கருப்பொருளை உணர்த்தும் இந்த அர்ப்பணிப்பு முயற்சி, பள்ளி மாணவர்களுக்கு நேரடி கல்விப் பயனை வழங்கியதுடன் பள்ளி ஆசிரியர்கள் நிர்வாகத்தினர் மற்றும் கிராம மக்களாலும் பாராட்டப்பட்டது.

# மதுராந்தகத்தில் சட்டமேதை அம்பேத்கர் 69வது நினைவு தினம்
## புரட்சி பாரதம் கட்சியினர் மாலை அனிவித்து மரியாதை

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் சட்ட மேதை டாக்டர் பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தும் மலர் தூவியும் கரின் நினைவேந்தலில் மதுராந்தகம் ஒன்றிய செயலாளர் மாதவன்,



அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு தினத்தையொட்டி புரட்சி பாரதம் கட்சியின் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் அதே சேகர் தலைமையில் சட்ட மேதை அம் வீரவணக்கம் செலுத்தினர் இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டினை மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் பகிரதன் செய்திருந்தார்

சட்டமேதை அம்பேத் மற்றும் படாளம் ஒன்றிய செயலாளர் குணா, முனுசாமி மற்றும் புரட்சி பாரதம் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் கிராமத்தில், இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 70வது நினைவு தினத்தை முன்னிட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் சேப்பாக்கம் கிளை நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து அண்ணலின் ஆளுயர திருவுருவுச்சிலைக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

# பிரான்சில் கிறிஸ்துமஸ் கொண்டாட்ட கூட்டத்திற்குள் புகுந்த கார் 10 பேர் பலி



பிரான்ஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட குவாடலூப் பகுதியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் கோலாகலமாக நடந்தது. அப்போது கூட்டத்திற்குள் கார் அதிவேகமாக புகுந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு போலீசார் மற்றும் மீட்பு படையினர் விரைந்தனர். இந்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயம் அடைந்தனர். இந்த துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது. விபத்துக்கான காரணம் தற்போது தெரியவில்லை, மேலும் இது குறித்து விசாரணை நடந்து வருகிறது . காரை இயக்கிய டிரைவர் குறித்து எந்த விவரமும் வெளியாகவில்லை. விபத்துக்கு காரில் ஏதும் தொழில்நுட்ப பிரச்னை ஏற்பட்டதா? என்ற பல்வேறு கோணத்தில் விசாரணை நடக்கிறது. இந்த விபத்து திட்டமிட்டு நிகழ்ந்தப்பட்டதா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு, கிழக்கு ஜெர்மனியின் மாக்ட்பர்க் நகரத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு சில நாட்களுக்குமுன்பு,கிறிஸ்துமஸ் பொருட்கள் விற்பனை சந்தையில் ஒரு கார் மோதியதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். மேலும் 68 பேர் காயமடைந்தனர். தற்போது இந்தாண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்ட, கூட்டத்திற்குள் கார் புகுந்து 10 உயிரிழந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.



## புரட்சியாளர் அம்பேத்கர் 69வது நினைவு நாள்
# மதுராந்தகம் தொகுதி விசிக சார்பில் மாபெரும் பேரணி

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மதுராந்தகம் நகரத்தில் அமைந்து உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு சட்டமன்ற தொகுதி செயலாளர்

பாக்கம் ஏ.பேரறிவாளன் தலைமையில் 300க்கும் மேற்பட்டோர் கருஞ்சட்டை அணிந்து ஊர்வலமாக பேரணி சென்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர்

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் மு.கலைக்கதிரவன் தொகுதி துணைச் செயலாளர் வேலழகன் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கதிர்வாணன் முகிலன் பன்னீர்செல்வம் தயாநிதி கிட்டு பிரபாகரன் சமத்துவன் கலங்கரைகாசி

மாநில மாவட்ட நிர்வாகிகள் மா.அப்பாதுரை தனு. பார்த்தசாரதி செல்வம் பொய்யாமொழி ஆசிரியர் மூர்த்தி சரவணன் தலித்ஏழுமலை ராஜபாரதி தினகரன் மகாதேவன் வழ.வினோத்ராஜன் நாராயணன் சத்யா ராஜேஷ் பழனி சிவா மதன் சுபாஷ் பிரகாஷ் கண்ணியப்பன் முருகன் கெங்கா சாம்ராஜ் ராஜு மூர்த்தி உதயா முரளி விஜயன் செட்டு எழில் மணி விசு இமான் பிரேம் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் கிராமத்தில், இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 70வது நினைவு தினத்தை முன்னிட்டு திமுகதலைமைசெயற்குழுஉறுப்பினரும்,நல்லூர்வடக்குஒன்றியகழகச்செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி தலைமையில் அண்ணலின் ஆளுயர திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது, கிளைக் கழகச் செயலாளர் ஏழுமலை, மாவட்ட, ஒன்றிய, கிளைபொறுப்பாளர்கள்பலர்உடன்இருந்தனர். தொடர்ந்து, சமத்துவ கோட்பாடுகளை முன்னிறுத்தி செயல்படும் திராவிட மாடல் அரசு குறித்து ஒன்றிய கழக செயலாளர் உரையாற்றினார்.

# உலக மண் தினம்: 100 விவசாயிகளுக்கு எட்யூலைட் சீட்ஸ் அறக்கட்டளை ஆலோசனை

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள




சிறுபாக்கம் தனியார் மண்டபத்தில் உலக மண் தினத்தை முன்னிட்டு, எட்யூலைட் சீட்ஸ் அறக்கட்டளை சார்பில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.

இந்நிகழ்ச்சியில், எட்யூலைட் சீட்ஸ் அறக்கட்டளை குழுவினர் விவசாயிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தனர். இதில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு, ஒவ்வொரு பருவத்திற்கும் முன்னதாக மண் பரிசோதனை செய்து, மண்ணின் தன்மையை அறிந்து உரமிட வேண்டும் என்றும், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண் வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், விவசாயிகள் தனித்தனியாகச் செயல்படுவதை விட, உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக ஒன்றிணைந்து செயல்பட்டால், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் மற்றும் இடுபொருட்களைக் குறைந்த விலையில் பெறலாம் எனவும் மேலும் இந்த நிறுவனத்தின் மூலமாக இணைந்து செயல்படுவதன் மூலம் விவசாயிகள் நாளை முதலீட்டாளராகவும் வளரலாம் எனவும் அரசு வழங்கும் சலுகைகளையும் பெறலாம் உள்ளிட்ட பல்வேறு கருத்துகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து வழிகாட்டப்பட்டது.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் கிராமத்தில் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் 70வது நினைவு தினத்தை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சியின் நல்லூர் வடக்கு ஒன்றிய பட்டியல் அணி தலைவர் மீசை ராமசாமி தலைமையில் திரளான கட்சி நிர்வாகிகள் அண்ணலின் சிலைக்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினர். இதில், மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள், பட்டியல் அணி உறுப்பினர்கள் பலர் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுடன் தங்கி பயிற்சி பெறும் திட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்., வேளாண் அறிவியல் கல்லூரியை சேர்ந்த ரோஜர்ஸ் குழு மாணவர்கள் கிராம



வேளாண் பணி அனுபவத்திட்டத்தின் ஒருப்பகுதியாக, கல்லூரி முனைவர் டாக்டர் M.ஜவஹர்லால், பேராசிரியர்கள் ( R.ராஜசேகரன், M.R.நவீன்குமார், A. முகமது இக்ஷானுல்லா,T. குங்கும செல்வன், சஷ்மிதா ) மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.R.மகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 05.12 2025 உலக மண் தினத்தையொட்டி எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்களின் சார்பில் காலை 9.30 மணியளவில்கடப்பாக்கத்தில்உள்ளதிரு.பெ.கிருஷ்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் "ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண்" என்ற தலைப்பில் மாணவர்கள் பேரணி நடத்தப்பட்டது இப்பேரணியை பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் வகுப்பாசிரியர்கள் கலந்துக்கொண்டு தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினர்....பேரணி முடிந்தபின் கல்லூரி மாணவர்களின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு "மண்ணின் மைந்தன் உழவன்" என்ற தலைப்பில் கட்டுரை போட்டி மற்றும் "மரம் வளர்ப்போம், உயிர் காப்போம்" என்ற தலைப்பில் ஓவியப்போட்டியும் நடத்தப்பட்டன இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கல்லூரி மாணவர்கள் பரிசளித்து மகிழ்ந்தனர். இறுதியில் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைசுற்றிபத்துக்கும்மேற்பட்டமரக்கன்றுகள் கல்லூரி மாணவர்களின் சார்பில் நடப்பட்டன.ரோஜர்ஸ் குழு வேளாண் மாணவர்கள் (ச.பிரபாகரன், க.ஆதவன், பா.நித்தியானந்தம், ந.ம.சுகதக்க்ஷணன் வே.சசிதரன், சே.ஹரிஹரன், நா.சாய் கார்த்திக், வே.லோகேஷ், ச.ரோகித்,ந.ஷேக் பர்ஹான் ) ஆகியோர் உள்ளனர்

# விவசாயத்திற்கு முன்னுரிமையா அல்லது மீன்பிடி தொழிலுக்கு முன்னுரிமையா பொதுமக்கள் கேள்வி?

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட கொண்டம்பட்டி ஊராட்சியில்



நடுக்குட்டைஏரியில்மீன் குஞ்சுகளைவிட்டுபெரிதாகி மீன் பிடிப்பது வழக்கம் இந்த ஏரியை நம்பி சுமார் 30 விவசாயகிணறுகளும் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்களும் நம்பி இருக்கும் ஏரியில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது தற்போது மீன் பிடிக்க வேண்டும் என்று மீன்பிடி ஒப்பந்ததாரர் கனரக வாகனங்களை கொண்டு தண்ணீர் வெளியேற்றிவிட்டு மீன்பிடிக்க ஒப்பந்ததாரர் நீர் வெளியேற்றிஇருக்கிறார்தகவல்அறிந்தவிவசாயிகள் கடும் போராட்டம் செய்வோம் என்று ஒப்பந்ததாரரை எச்சரித்த பின் விவசாயிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு உள்ளார் விவசாயிகள்காவல் நிலையத்திற்குதகவல்தெரிவிக்கப்பட்டு ஊத்தங்கரை காவல்துறையினர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று ஒப்பந்ததாரர் இடம் முறையான ஆவணங்களை கேட்டு அறிந்தார்கள் அதன் பின்பு காவல் நிலையத்திற்கு வந்து உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து விட்டு தண்ணீர் வெளியேற்றுங்கள் என்று காவல்துறை எச்சரிக்கை விடுத்ததால் ஒப்பந்ததாரர் அங்கு இருந்து சென்றுள்ளார் விவசாயத்திற்கு என்று அரசுபல்வேறுமுயற்சிகள்மேற்கொண்டுஏரிகளுக்கு தண்ணீர் நிரப்ப வழிவகை செய்கின்றனர் ஆனால் இதுபோன்றமீன்பிடி ஒப்பந்ததாரர்கள் விவசாயத்தை அழிக்கும் நோக்கில் இது போன்ற செயல்களில் ஈடுபடுவதால் விவசாயம் பாதிக்கும் என்று விவசாயிகளிடம் ஒரு கேள்விக்குறியாக உள்ளது எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்

# தென்காசி மாவட்டத்தில் முத்தூட் நிதி நிறுவனம் சார்பில் வாடிக்கையாளர் தின விழா

தென்காசி மாவட்டத்தில் சுரண்டை மற்றும் சேர்ந்த மரம் ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் முத்தூட் நிதி நிறுவனம் சார்பில் வாடிக்கையாளர் தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருநெல்வேலி மண்டல மேலாளர் காளிராஜ் பேசுகையில் முத்தூட் நிதி நிறுவனம் என்பது ஒரு பெரிய தங்க நகை கடன் வழங்கும் முதன்மை நிறுவனமாகும். இதன் கிளைகளை வெளிநாடுகளிலும் திறந்து தனி பெரும்பான்மையுடன் இயங்கி வருகிறது என்றும், இதில் திருநெல்வேலி மண்டலத்தில் மட்டும் 80 கிளைகள் இயங்கி வருகிறது இதற்கெல்லாம் வாடிக்கையாளர் ஆகிய உங்களது பெரும் பங்களிப்பும் எங்கள் மீது நீங்கள் கொண்ட அளவில்லா நம்பிக்கை தான் காரணம் என்று கூறியதுடன் தங்களது ஆதரவை தொடர்ந்து அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து சுரண்டை மற்றும் சேர்ந்த மரம் கிளைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக ஒரு கிலோ சர்க்கரை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பிராந்திய மேலாளர் கணேசமூர்த்தி மார்க்கெட்டிங் மேலாளர் சிவசுப்பிரமணியன், கிளை மேலாளர்கள்லிங்கராஜ், ராஜேஷ், கிளை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (6.12.2025) ஈரோடு, திண்டல், வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்ற வேலை நாடுளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி , கோவை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஆ. ஜோதிமணி, உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ராதிகா, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) மலர்விழி உட்பட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கீழச் சுரண்டையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சட்டம் மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 69ஆவது நினைவு நாளில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் எம்பி.பாக்கியராஜ் தலைமையில் ஊர் நாட்டாமை சுப்புராஜ் கீழப்பாவூர் ஒன்றிய பொறுப்பாளர் பாபு ஆலங்குளம் ஒன்றிய பொறுப்பாளர் வேல்முருகன் கீழப்பாவூர் ஒன்றிய துணைச்செயலாளர் சாமி கீழச்சுரண்டை , விசிக நிர்வாகிகள் அருண்குமார் சின்னராஜ் அமல்ராஜ் மாரித்துரை அருண் ராஜேந்திரன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் அம்பேத்கர் நினைவு தினம் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் 69வது நினைவு நாளையொட்டி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியாசமி ஆகியோர் தென்பாகம் காவல்நிலையம் அருகில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளார்கள் நல வாரிய தலைவர் ஆறுச்சாமி, மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட துணைச்செயலாளர்கள் ராஜ்மோகன்செல்வின், ஆறுமுகம், மண்டல தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரிதங்கம், மாவட்ட அணி நிர்வாகிகள் கவிதாதேவி, அபிராமிநாதன், அந்தோணிஸ்டாலின், பெருமாள், நிக்கோலாஸ் மணி, அருண்குமார், பழனி, மாநகர அணி கவுன்சிலர்கள் சரவணக்குமார், விஜயகுமார், பவானி, வைதேகி, ஆறுமுகம், தெய்வேந்திரன், ரெக்ஸ்லின், நாகேஸ்வரி, ஜெயசீலி, கந்தசாமி, பொன்னப்பன், பகுதி அணி அமைப்பாளர்கள் சூர்யா, முன்னாள் கவுன்சிலர் ஜெயசிங், வட்ட பிரதிநிதிகள் பாஸ்கர், துரை, புஷ்பராஜ், மற்றும் அற்புதராஜ், மணி, பிரபாகர், அல்பட், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் ஓமலூர் பேருந்து நிலையத்தில் சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் 70வது நினைவு தினத்தை முன்னிட்டு பாஜக சேலம் மாவட்ட தலைவர் ஹரிராமன் தலைமையில் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர்தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பாஜக கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் அம்பேத்கர் நினைவு நாள்; ஐ.என்.டி.யூ.சி காங்கிரஸ் சார்பில் மரியாதை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் 69வது நினைவு நாளை முன்னிட்டு தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் முன்பு அமைந்துள்ள அன்னாரின் முழு திருஉருவச்சிலைக்கு

மாநில ஐ.என்.டி.யூ.சி பொதுச் செயலாளர் காங்கிரஸ் மாநில பொதுகுழு உறுப்பினர் முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர் பெருமாள் சாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் அகில இந்திய ஒர்க்கர்ஸ் கமிட்டி தூத்துக்குடி மாவட்ட தலைவர் ஜெயக்கொடி, வர்த்தக காங்கிரஸ் மாவட்ட தலைவர் டேவிட் பிரபாகரன், தெற்கு மண்டல தலைவர் தங்கராஜ், பழங்குடியினர் பிரிவு மாநிலச் செயலாளர் முனியசாமி, மாவட்ட பொது செயலாளர் இக்னேஷியஸ், ,

ரூஸ்வெல்ட், ஆராய்ச்சி துறை சிவராஜ் மோகன், மீனவர் அணி மிக்கேல் குரூஸ், எஸ் சி எஸ் டி பிரிவு முன்னாள் தலைவர் ராஜாராராம், ,சுரேஷ்குமார், முருகேசன், மகிளா காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவி இசக்கியம்மாள் வழக்கறிஞர் செல்வம் , காமராஜ்,

சேக்ஸ்பியர், ஆனந்தராஜ், முத்துராஜ் பிரேம்நாத் அசனார் செல்வம், செல்வமுருகன், பாலகிருஷ்ணன், தெர்மல் முத்து, ஐஎன்டியூசி சார்ந்த சிவலிங்கம், முத்து, ரமேஷ்,, பாலன் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் காங்கிரசை சார்ந்த ஜெயசிங், தியாகு, விஜய், திவாகர், துரை, மற்றும் செந்தில், சூர்யா, இசக்கி, முனியசாமி, வினோத் மற்றும் ஏராளமான தேசியத் தோழர்கள் கலந்து கொண்டனர்.





## வக்ஃப் மற்றும் வழிபாட்டு உரிமையை காக்க வலியுறுத்தி

# கோவை உக்கடம் பகுதியில் எஸ்டிபிஐ கட்சியினர் நடத்திய மக்கள் திரள் ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

பாபரி மஸ்ஜித் இடிப்பு தினமான டிச.06ம் தேதியை முன்னிட்டு, வக்ஃப் மற்றும் வழிபாட்டு உரிமையை காப்போம் என்கிற முழக்கத்துடன் தமிழகம் உள்பட நாடு முழுவதும் எஸ்டிபிஐ கட்சி சார்பாக பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

அதன் ஒருபகுதியாக எஸ்.டி.பி.ஐ கட்சியின் கோவை மத்திய மாவட்டம் சார்பாக உக்கடம் பகுதியில் எஸ்.டி.பி.ஐ கட்சியின் மாவட்ட துணைதலைவர் சிவக்குமார் தலைமையில் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் அப்பாஸ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் மீடியா மன்சூர் தொகுத்து வழங்கினார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் முகமது இசாக் மற்றும் தொகுதி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட எஸ்.டி.பி.ஐ கட்சியின் மாநில பொதுச் செயலாளர் அபூபக்கர் சித்தீக், தந்தை பெரியார் திராவிட கழக பொதுச் செயலாளர் கு ராமகிருட்டிணன் கோரிக்கையை வலியுறுத்தி உரை நிகழ்த்தினர்.

இந்த மக்கள் திரள் ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உள்பட கலந்து கொண்டு, வக்ஃப் மற்றும் வழிபாட்டு உரிமையை காக்க கோஷமிட்டு முழக்கமிட்டனர்.



சிவகங்கை மாவட்டத் தலைவர் D.பாண்டித்துரை தலைமையில் சமத்துவம், கல்வி, மனித உரிமை, சமூக நீதி ஆகிய உயரிய மதிப்புகளை நிலைநிறுத்த தனது வாழ்நாளை முழுவதும் அர்ப்பணித்த மகத்தான தலைவர், இந்திய அரசியலமைப்பின் தந்தை டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று டிசம்பர் 6ம் தேதி (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, காரைக்குடியில் உள்ள சட்டமேதை சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரது சிந்தனைகள், சமூகப் பணிகள், ஒடுக்கப்பட்டோருக்காக செய்த போராட்டங்கள் மற்றும் இந்திய ஜனநாயக வளர்ச்சிக்கு அவர் செய்த மாபெரும் பங்களிப்புகளை நன்றியுடன் நினைவு கூறும் தருணம் இது. சிவகங்கை மாவட்ட தலைவர் D.பாண்டித்துரை அவர்கள் தலைமையில் நிர்வாகிகள் தொண்டர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1,050 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு



தூத்துக்குடியில் தமிழக அரசுக்கு சொந்தமான அனல்மின் நிலையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு 5 யூனிட்டுகள் மூலம் 1,050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மின்சாரம் அனுப்பப்படுகிறது

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 15-ந்தேதி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக முதலாவது மற்றும் 2-வது யூனிட்டுகள் தீ விபத்தில் எரிந்து முற்றிலும் சேதமானது.

இந்த நிலையில் 3-வது யூனிட்டிலும் நேற்று இரவு பழுது காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் மொத்தம் உள்ள 5 யூனிட்டுகளிலும் மின் உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதால் 1050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அனல் மின் நிலையத்தில் மின்சார உற்பத்தியை தொடங்காவிட்டால் மின்வெட்டு ஏற்படும் அபாயம் உருவாகும் என கூறப்படுகிறது.

# ஈரோட்டில் அம்பேத்கர் நினைவு நாள் காங்கிரஸ் சார்பில் அஞ்சலி



இந்திய அரசியலமைப்பின் தலைமைச் சிற்பியும், சமூக நீதி மற்றும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட சட்டமேதையுமான டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு நாள் நேற்று (06.12.2025) அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக அண்ணல் அம்பேத்கரின் மகத்தான பணிகளைப் போற்றும் விதமாக, காலை 10:30 மணிக்கு ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அன்னாரதுதிருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்விற்கு மண்டல தலைவர்களான மாமரத்து பாளையம் எஸ். கோபி, ஆர். விஜயபாஸ்கர், எச்.எம். ஜாபர் சாதிக், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் எஸ் சி பிரிவு தலைவர் சிந்தன் நகர் குருசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்விற்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ்கமிட்டிதலைவர் டி. திருச்செல்வம் தலைமை தாங்கி சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் ஈ.பி. ரவி, மாவட்ட துணைத் தலைவர்களான பா.ராஜேஷ் ராஜப்பா, கே.எஸ். செல்வம், சி. பாஸ்கர்ராஜ், மாவட்ட பொதுச் செயலாளர்களான ஏ. வின்சென்ட், கராத்தே யூசுப், ஏ.சி. சாகுல் அமித் ஆகியோர் கலந்து கொண்டு பங்கேற்றனர்.

மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டி.சி.டி.யூ)மாநில துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன், முன்னாள் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் குப்பண்ணா சந்துரு, ஈரோடு மாவட்டகாங்கிரஸ்ஊடக பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி. மாரிமுத்து, ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு பிரபு, ஐ.என்.டி.யு.சி மாவட்ட பேரவை பாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட நிர்வாகிகளான முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை சுப்பிரமணியம், பெரியார் நகர் சூரஜ், ராஜாஜிபுரம் சிவா, பி. குமரேசன், வேன் ராமசாமி, மேட்டு நாசவம்பாளையம் கதிரேசன், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி கே.தினகரன், கனிராவுத்தர்குளம்பிரபு, நரிப்பள்ளம் ரவிச்சந்திரன் மற்றும் பலர் திரளாகக் கலந்துகொண்டு பாபாசாகேப் அம்பேத்கர் அஞ்சலி செலுத்தினார்கள்.

# ஈரோட்டில் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு அமைச்சர் முத்துசாமி மரியாதை





இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 69 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்றுஈரோட்டில்உள்ள அவரது சிலைக்குதமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் சு. முத்துசாமி மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

இந்த நிகழ்வில் திமுக துணைபொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ் எம்.பி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், புதிய திராவிடர் கழகத்தின் நிறுவனத் தலைவர் கே.எஸ்.ராஜ் கவுண்டர்,

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் சூரியமூர்த்தி,

சமூக நீதி மக்கள் கட்சி தலைவர் வடிவேல் ராமன்,திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் சண்முகம், திராவிடர் விடுதலைக் கழக மாநில பொருளாளர் ரத்தினசாமி,

மாவீரன் பொல்லான் பேரவை பொதுச் செயலாளர் சண்முகம் ,

ஜெய் பீம் மக்கள் கட்சி நிறுவன தலைவர் அறிவழகன்,ஜனநாயக மக்கள் கழகதலைவர் ஆறுமுக கண்ணன்,திராவிட சமத்துவ கட்சி தலைவர் அண்ணாதுரை,

தமிழக தொழிலாளர் கட்சி தலைவர் மாகாளியப்பன்

மற்றும் புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அமைப்பு குழுவைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரியில் நேற்று (06.12.2025) அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி நடைபெற்ற சமபந்தி விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ,உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.



சட்ட மேதை டாக்டர் பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கர் 69 வது நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி முகாம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள அம்பேத்கரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். அதனை தொடர்ந்து பன்னீர்செல்வம் பூங்காவில்அமைந்துள்ளமுழுஉருவச்சிலைக்குமாலைஅணிவித்தும்,மலர்தூவியும்மரியாதைசெய்தார்.இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை மேல்சபை உறுப்பினரும், கழகத் துணைப் பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராஜ்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி .சி. சந்திரகுமார், மற்றும், கழக மாநில ,மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், மண்டல குழு தலைவர்கள்,மாமன்ற உறுப்பினர்கள்,பகுதி கழகச் செயலாளர்கள், பகுதி கழக ,வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் 69 வது நினைவு நாளை முன்னிட்டு "அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை" சார்பாக ஈரோடு மாநகர் பன்னீர் செல்வம் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாநில தலைவர் P.அய்யாசாமி ,மாநில பொருளாளர் V.ஜெயராமன் மாவட்ட தலைவர் G.தங்கவேல் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜீவா சுரேஷ் உட்பட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வீர வணக்க முழக்கமிட்டு மரியாதை செலுத்தினர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில், நேற்று (06.12.2025) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ,உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி ,மாவட்ட ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலஅலுவலர்மகேஸ்வரி,மாவட்டபிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில், நேற்று (06.12.2025) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தூய்மை பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணத்தினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (6.12.2025) ஈரோடு, திண்டல், வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்ற வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி, கோவை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ராதிகா, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) மலர்விழி உட்பட பலர் உள்ளனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.